திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம்.

# தமிழில் முதுமாணி
# Master of Tamil

## 1. அறிமுகம் (Preamble)

உலகிலுள்ள தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்றாகும். நீண்ட இலக்கியப் பாரம்பரியமும் பிறமொழிகளின் செல்வாக்கிற்கு உட்படாமல் தனித்து நிற்கும் இலக்கணமும் தமிழ் செம்மொழியாக உயர்ந்து நிற்பதற்குக் காரணமாக உள்ளன. தமிழின் இலக்கிய இலக்கணப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட்டு அடுத்த தலைமுறையினருக்கு வழங்கப்படவேண்டும். தமிழ்மொழியின் அமைப்பு அது உலக மொழிகள் பலவற்றுடனும் கொண்டுள்ள பிணைப்பு என்பன ஆழமான மொழியியல் பின்புலத்தில் ஆய்வுசெய்யப்பட வேண்டும். அவ்வாறே தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்தும் சமூக பண்பாட்டு அம்சங்கள் தெளிவாக ஆராயப்பட்டு வரலாற்றுத் தொடர்ச்சியும் பண்பாட்டுச்சிறப்பும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும். தமிழ் என்பது ஒரு மொழி என்பதற்கு அப்பால் அது இலக்கியம், இலக்கணம், சமயம், சமூகவியல், மெய்யியல், அறிவியல் முதலான பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை கலைமாணிப் பட்டப்படிப்பின்போது கற்றுக்கொண்ட மாணவர்களுக்கு அதனை விரிவாக்கித் தமிழியலின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக்காட்டுவதாக இக்கற்கைநெறி அமையும்.

## 2. பட்டதாரித் தகுதிக்கோவை (Graduate Profile)

தமிழில் முதுமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தமிழிலுள்ள மரபுசார்ந்த இலக்கணத்தினைத் தெளிவாகக் கற்றுக்கொள்வதுடன் நவீன இலக்கணத்திற்கான தேவையினையும் தெரிந்துகொள்வர். இதன்மூலம் மொழியில் காலந்தோறும் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் இவர்கள் அறிந்துகொள்வர்.

பழந்தமிழ் இலக்கியங்களையும், நவீனதமிழ் இலக்கணங்களையும் கற்பதால் பண்டைத் தமிழ்ச் சமூக வரலாற்றையும் அது பிற்காலங்களில் அடைந்த வளர்ச்சி நிலைகளையும் அறிந்துகொள்வதுடன் அவை தொடர்பான விமர்சனங்களை முன்வைக்கக்கூடிய ஆற்றலையும் பெற்றுக்கொள்வர்.

### 3. புலமைத்துவ மேம்பாடு (Academic Excellent)

- மரபுசார்ந்த தமிழ் இலக்கண இலக்கியங்களில் தெளிவான அறிவைப்பெறுவர்.
- நவீனதமிழ் இலக்கணத்திலும் நவீன இலக்கியங்களிலும் தெளிவான அறிவைப்பெறுவர்.
- காலமாற்றத்திற்கேற்ப இலக்கணத்திலும் இலக்கியப்போக்கிலும் ஏற்பட்டுவந்த மாற்றங்களை விமர்சிப்பர்.
- சமுதாய வளர்ச்சிப்போக்கினை இலக்கியங்களினூடாக அறிந்து விமர்சிப்பர்.
- காலந்தோறும் உருவாகிவந்த கருத்துநிலைகளுக்கேற்ப இலக்கியத்தின் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் ஏற்பட்ட மாற்றங்களை விமர்சிப்பர்.
- தமிழை ஆங்கிலத்திலும் ஆங்கிலத்தைத் தமிழிலும் மொழிபெயர்க்கும் பயிற்சியைப் பெற்றுக்கொள்வர்.

### 4. தொழிலுக்கான தயார்நிலையும் வேலைவாய்ப்பும்.

தமிழில் முதுமாணிக் கற்கையினைப் பயில்கின்ற மாணவர்கள் ஆசிரியர்களாகவோ ஊடகவியலாளர்களாகவோ பணியாற்றுகின்றவர்களாக இருப்பதனால் இவர்கள் தமது தொழில்சார் திறமைகளை வளர்த்துக்கொள்ள இக்கற்கைநெறி உதவும்.

வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்பவர்களுக்கு தமிழில் சிறந்த தேர்ச்சியினை இக்கற்கைநெறி வழங்குவதால் இவர்கள் ஆசிரியர்களாகவோ, சிறந்த விமர்சகர்களாகவோ உருவாகுவதற்கான வாய்ப்பை இக்கற்கைநெறி வழங்கும்.

### 5. கற்கைநெறியின் நோக்குகள்

தமிழில் முதுகலைமாணிப்பட்டத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சியுடையவர்களாகவும், தன்னம்பிக்கையும் சுயசிந்தனையும் படைப்பாளுமையும் உடையவர்களாகவும் உருவாகுவதற்கு இப்பயில்துறை வழிவகுக்கும்.

#### 5.1. கற்றல்பேறு

- தமிழ்மொழியினதும் இலக்கியத்தினதும் தொன்மையினையும் வரலாற்றினையும் வரையறை செய்வர்.
- காலந்தோறும் மொழியில் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் அதன் வளர்ச்சியினையும் திறனாய்வுபூர்வமாகக் கண்டுகொள்வர்.

- தமிழ்மொழியையும் இலக்கியத்தையும் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்வர்.
- சுயமாகக் கட்டுரைகளை வடிவமைப்பர்.
- இலக்கிய உத்திகளை இனங்காண்பர்.
- இலக்கியத்தின்வழி தமிழ் மக்களின் சமூக பொருளாதார வரலாற்றை வியாக்கியானம் செய்வர்.
- தமிழ் இலக்கியங்கள் காட்டும் உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களைக் கண்டுகொள்வர்.
- இலக்கியத்தின் உருவ உள்ளடக்கநிலையில் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் அதற்கான காரணங்களையும் தெரிந்துகொள்வர்.
- இலக்கியப் படைப்பாளிகளின் தனித்தன்மைகளை விபரிப்பர்.
- உலகத்தரம்வாய்ந்த இலக்கியங்களுடன் தமிழ் இலக்கியங்களை ஒப்பிடுவர்.

### 5.2. ஆக்கமுயற்சியும் திறனாய்ந்து கூறுதலுக்கான தகவமைப்பும்

- இக்கற்கைநெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்கள் சமூகத்திலுள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்கான தீர்வினை வழங்கக்கூடியவர்களாக இருப்பர்.
- தமிழில் சிறந்த கட்டுரைகளை எழுதக்கூடியவர்களாக இருப்பர்.
- படைப்பிலக்கியங்களை உருவாக்கக்கூடியவர்களாக இருப்பதுடன் அவற்றைத் திறனாய்வு செய்யும் ஆற்றலையும் பெற்றுக்கொள்வர்.

### 5.3. ஒழுக்க விழுமியங்கள் தொடர்பில் விழிப்புணர்வாகவும் சுயசிந்தனையுடனும் இருத்தல்

இக்கற்கைநெறியின் மூலம் ஒழுக்க விழுமியங்களின் உயர்வும், சுயசிந்தனைக்கான வழிவகைகளும் கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் சுயமான சிந்தனை உடையவர்களாகவும் ஒழுக்க விழுமியங்களை மதித்து நடக்கக்கூடியவர்களாகவும் அதனைப் பிறருக்கு எடுத்துக்கூறிச் சமுதாய நலனை மேம்படுத்தக்கூடியவர்களாகவும் உருவாக்கப்படுவர்.

## 6. தொடர்பாடல்

இம் மாணவர்கள் தமிழ்மொழியில் ஆற்றலைப் பெற்றிருப்பதாலும், இரண்டாம்மொழியில் பயிற்சிபெறுவதாலும் சமூகத் தொடர்பாடலை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலைப் பெற்றுக் கொண்டவர்களாக இருப்பர்.

## 7. நிகழ்ச்சித்திட்ட அமைப்பு

- இக்கற்கைநெறி இரண்டு பருவங்களை உள்ளடக்கிய ஓராண்டுக்காலக் கற்கைநெறியாகும்.
- ஓராண்டுக் காலத்தில் மாணவர்கள் பதினொரு பாட அலகுகளைக் கற்பதுடன் இரண்டாவது பருவத்தின் நிறைவில் ஆய்வேடு ஒன்றினையும் சமர்ப்பிக்கவேண்டும்.
- ஒவ்வொரு பருவத்திலும் கற்பிக்கப்படும் பாட அலகுகள் மூன்று கற்கைக்கால அளவுப் பெறுமதி உடையனவாக இருப்பின் (3 Credit) 45 மணித்தியால விரிவுரை/ கட்டுரை வகுப்புக்களைக் கொண்டதாகவும் இரண்டு கற்கைக்கால அளவுப்பெறுமதியைக் கொண்டவையாயின் முப்பது மணித்தியால விரிவுரைகள் / கட்டுரை வகுப்புக்களை உடையதாகவும் அமையும். ஆய்வேடு ஆறு கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாக அமையும்.
- மொத்தமாக மாணவர்கள் இக்கற்கைநெறியில் 35 கற்கைக்கால அளவுப்பெறுமதியைப் பெற்றுக்கொள்வர். (35 Credit)

## 8. பரீட்சை மதிப்பீடு தொடர்பான நடைமுறைகள்

**8.1.** உள்ளகக் கற்கைநெறிக்கான மதிப்பீடு

| | | |
|---|---|---|
| தனிப்பட்ட கட்டுரை | 10% | |
| குழு ஒப்படை | 10% | 30% |
| முன்னிலைப்படுத்தல் | 10% | |

**8.2.** இறுதி அரையாண்டுப் பரீட்சை 70%

100%

**8.3.**

| ஆய்வு தொடர்பான மதிப்பீடு | |
|---|---|
| ஆய்வுத்திட்ட முன்மொழிவு<br><br>வரவு, கலந்துரையாடல்<br><br>ஆய்வேடு – மதிப்பீடு<br><br>வாய்மொழிப் பரீட்சை | 15%<br><br>10%<br><br>60%<br><br>15% |
| | 100% |

**9. இறுதிப் பரீட்சைக்கான தகுதி**

அரையாண்டின் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தாம் தோற்றவுள்ள பாடத்திற்குரிய உள்ளகக் கற்கைநெறிக்கான 30% மான புள்ளிகளில் 12% மான புள்ளிகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பதுடன், குறித்த பருவத்தில் நடைபெற்ற விரிவுரை/ கட்டுரை வகுப்புக்களில் 80% மானவற்றிற்குச் சமுகமளித்திருக்க வேண்டும்.

**10. தரப்புள்ளிகளைக் கணித்தல்**

இக்கற்கைநெறியின் தரவேறுபாடுகள் கற்கைக்கால அளவுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டதாகவே கணிக்கப்படுகின்றன. கற்கைக்கால அளவுப்பெறுமதி என்பது மாணவர்களுடன் தொடர்புகொள்ளும் மணித்தியாலங்களின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

கலைப்பீடத்தின் நியமமாக 15 மணித்தியால விரிவுரைகளும், கட்டுரை வகுப்புக்களும் கொள்ளப்படுவதால் 15 மணித்தியாலம் ஒரு கற்கைக்கால அளவுப்பெறுமதியுடையதாகக் கொள்ளப்படும். ஒரு பருவத்தில் 45 மணித்தியால விரிவுரைகள்/ கட்டுரை வகுப்புக்கள் நடாத்தப்படுமாயின் அது 3 கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகக் கொள்ளப்படும். 30 மணித்தியால வகுப்புக்களை உடைய பாடநெறி இரண்டு கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகக் கொள்ளப்படும். ஆய்வேடு 06 கற்கைக்கால அளவுப்பெறுமதி உடையதாகும்.

**தரங்களைக் குறிக்கும் அளவுத்திட்டம்.**

மாணவர்களின் பெறுபேறுகள் அதிசிறப்புச் சித்தியிலிருந்து சித்தியின்மைவரை தரங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

| **புள்ளிகளின் வீச்சு** | **தரம்** | **தரப்புள்ளிப் பெறுமதி** |
|---|---|---|
| 80 ம் மேலும் | A+ | 4.00 |
| 75 – 79 | A | 4.00 |
| 70 – 74 | A- | 3.70 |
| 65 – 69 | B+ | 3.30 |
| 60 – 64 | B | 3.00 |
| 55 – 59 | B- | 2.70 |
| 50 – 54 | C+ | 2.30 |
| 45 – 49 | C | 2.00 |
| 40 – 44 | C- | 1.70 |
| 35 – 39 | D+ | 1.30 |
| 30 – 34 | D | 1.00 |
| 00 – 29 | E | 0.00 |

**11. தரப்புள்ளிச் சராசரி**

மாணவர்களின் ஒட்டுமொத்த கல்விசார் அடைவின் பெறுமதியை எடுத்துக்காட்டுவதே தரப்புள்ளிச் சராசரியாகும். இதனைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

| **பாட அலகு** | **பெற்ற தரம் GPV** | **கற்கைகால அளவுப்பெறுமதி Credit** | **தரப்புள்ளிப் பெறுமதி** | **மொத்த தரப்புள்ளிப் பெறுமதி** |
|---|---|---|---|---|
| MAT 10103 | A | 3 | 4.00 | 12.00 |
| MAT 10203 | A- | 3 | 3.70 | 11.10 |
| MAT 10303 | B+ | 3 | 3.30 | 9.90 |
| MAT 10403 | B | 3 | 3.00 | 9.00 |
| MAT 10503 | B- | 3 | 2.70 | 7.10 |
| MAT 10602 | B | 2 | 3.00 | 6.00 |
| மொத்தம் | | 17 | | 55.10 |

$$\text{தரப்புள்ளிச் சராசரி} = \frac{55.10}{17} = 3.24$$

இரண்டு பருவங்களிலும் பெற்ற தரப்புள்ளிச் சராசரிகளின் அடிப்படையில் வகுப்பு வழங்கப்படும்.

**12. வகுப்பு அளித்தல்**

| CGPA | வகுப்பு |
|---|---|
| 3.70 – 4.00 | முதலாம் வகுப்பு |
| 3.30 – 3.69 | இரண்டாம் வகுப்பு (மேற்பிரிவு) |
| 3.00 – 3.29 | இரண்டாம் வகுப்பு (கீழ்ப்பிரிவு) |
| 2.50 – 2.90 | சித்தி |

**13. பட்டம் வழங்கத் தகுதிபெறுதல்**

ஒரு மாணவன் பின்வரும் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யும் பட்சத்தில் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுக்கொள்வார்.

1. தரப்புள்ளிச் சராசரி 2.50 இற்குக் குறையாமல் பெற்றிருத்தல்.
2. அத்துடன் ஆய்வேடு உட்பட எல்லாப் பாடங்களிலும் C+ அல்லது அதற்கு மேலான தரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**14. பட்டப்பின் டிப்ளோமா வழங்குதல்**

பட்டம் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்ய முடியாத ஒருவர் 2.00 இற்கு குறையாத தரப்புள்ளிச் சராசரியினைப் பெற்றிருந்தால் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தைப் பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

**15. பட்டம் செல்லுபடியாகும் திகதி**

இரண்டாம் பருவத்தின் இறுதிப்பரீட்சையில் ஆய்வேடு சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து பட்டம் செல்லுபடியாகும்.

## 16. மீள்பரீட்சை

- குறித்த பட்டத்தைப் பெறுவதற்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்ய முடியாத மாணவர்கள் ஒரு தடவை மீள்பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
- ஒனறிற்கு மேற்பட்ட பாட அலகுகளில் ‘C’ தரத்தைப் பெற்ற மாணவர் ஒருவர் குறித்த பாட அலகுகளுக்கு மீளவும் தோற்றும் பட்சத்தில் குறைந்தது ‘C+’ தரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும் மீள்பரீட்சையின் போது வழங்கப்படும் அதியுயர் தரம் ‘B+’ மட்டுமே.
- அதிகாரமளிக்கப்படாமல் அல்லது செல்லுபடியாகக்கூடிய காரணம் ஏதும் இல்லாமல் தேர்வு ஒன்றுக்குத் தோற்றத்தவறும் மாணவர்கள் குறித்த பாட அலகில் சித்தியடையத் தவறியவர்களாகவே கருதப்படுவர்.
- மருத்துவக் காரணங்களினால் தேர்வு ஒன்றுக்குத் தோற்றத்தவறிய மாணவர் ஒருவர் மருத்துவச் சான்றிதழையும், விண்ணப்பக் கடிதத்தையும் மீள்பரீட்சைக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும். பல்கலைக்கழக மருத்துவ அலுவலரினால் இச்சான்றிதழ் சிபாரிசு செய்யப்படல் வேண்டும். இச்சான்றிதழ் குறிப்பிட்ட விடைத்தாளின் தேர்வு முடிவுற்று இரண்டு கிழமைக்குள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடப் பீடாதிபதியின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் உயர்பட்டப்படிப்புக்கள் பீடச்சபையின் சிபாரிசிற்கும், மூதவையின் அங்கீகாரத்திற்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மருத்துவக் காரணங்களினால் அரையாண்டுப் பருவ இறுதித் தேர்வுக்குச் சமுகமளிக்காத மாணவர்கள் அடுத்த மிக முந்திய சந்தர்ப்பத்தில் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன் இது முதலாவது முயற்சி எனக் கருதப்படல் வேண்டும்.
- மீள் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வகுப்பினைப் பெறுவதற்கு தகைமையற்றவர்கள்.
- மீளத் தோற்றும் பரீட்சார்த்திகள் அல்லது பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர் விடயத்தில் கற்கைக்கால மதிப்பீட்டுப் புள்ளிகள் அடுத்துவரும் அரையாண்டுப் பரீட்சை முடிவுகளுக்கு முன் கொண்டுசென்று சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

## 17. விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

தமிழில் முதுமாணிக் கற்கைநெறிக்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம்பெற்றவர்களாகவோ அல்லது பொருத்தமான வேறு தகைமைகளை உடையவர்களாகவோ இருத்தல் வேண்டும். இவர்கள் உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தினால் நியமிக்கப்படும் தேர்வுக்குழு ஒன்றினால் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

## 18. கால அட்டவணை

**முதலாம் அரையாண்டு**

| | |
|---|---|
| விரிவுரைகள் | 10 வாரம் |
| நடு அரையாண்டு விடுமுறை | 01 வாரம் |
| விரிவுரைகள் | 10 வாரம் |
| கற்கை விடுமுறை | 02 வாரம் |
| பரீட்சை | 02 வாரம் |